02.06.2025
அசல் வழக்கு எண்: 205/2017

வா.சா.2 சாட்சி மலைச்சாமி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 2 மற்றும் 3பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கில் அ பரிகாரமான என்ன கோரியுள்ளோம் என்று தெரியுமா என்றால் தெரியாது. அ பரிகாரம் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகளுக்கு கூட்டுக்குடும்ப பரிகாரம் என்று கோரப்பட்டுள்ளது என்றால் ஆமாம். (சாட்சி முதலில் பரிகாரம் என்னவென்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டதற்கு தெரியாது என்று பதில் கூறியதால் மீண்டும் மேற்படி பரிகாரத்தை கூறி சாட்சிகள் சரிதான் என்று கூறுகிறார்). கூட்டுக்குடும்ப சொத்துக்கள் எத்தனை இலக்கம் என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா வழக்கு சொத்துக்களை தவிர இன்னும் பிற கூட்டுக்குடும்ப சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. தாவா வழக்கு கூட்டுக்குடும்ப சொத்தை பொறுத்து தாக்கல் செய்வதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு கூட்டுக்குடும்ப சொத்தை பொறுத்து வில்லங்க சரிபார்ப்பு செய்தீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி அழகர்சாமி தாவா சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது தெரியுமா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி அழகர்சாமி வாரிசுகள் மூலம்தான் 3ம் நபர்களுக்கு தாவா சொத்தை வில்லங்கம் படுத்தியுள்ளார் என்றால் இல்லை. அழகர்சாமிதான் வில்லங்கம் படுத்தியுள்ளார்.

3. 05.05.2008ம் தேதி 1ம் பிரதிவாதி அழகர்சாமி மற்றும் அவர்களுடைய வாரிசுகள் புல எண். 2/2 ல் கண்ட 48 சென்டை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நானும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு 2 மனைவிகள் என்றால் ஆமாம். 2 மனைவிகளுக்கும் குழந்தைகள் இருக்கிறது என்றால் ஆமாம்.

4. 1ம் பிரதிவாதி அழகர்சாமியின் 2வது மனைவி மற்றும் 2வது மனைவியின் குழந்தைகளும் சேர்ந்துதான் மேலே சொன்ன 48 சென்டை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் இல்லை. மேலே சொன்ன 05.05.2008ம் தேதி மேலே சொன்ன புல எண்.2/2 ல் மேலும் 48 சென்டை கவிதா ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு 1ம் பிரதிவாதி அழகர்சாமி மற்றும் அவரது வாரிசுகள் கிரையம் செய்து கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். 29.03.2012ம் தேதி 1ம் பிரதிவாதி அழகர்சாமி அவரது மைனர் குழந்தைகளுடன் சேர்த்து புல எண்.40/3Cக்கு உட்பட்ட 539 ச.அடியை பாண்டியராஜ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

5. 1ம் பிரதிவாதி அழகர்சாமியின் மகள்தான் எனது மனைவி 4ம் வாதி அழகுசுந்தரி என்றால் ஆமாம். எனது மனைவிக்கு அழகர்சாமி எதுவும் தானம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். தானம் கொடுத்த சொத்து 1ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு சுயசம்பாத்திய சொத்து இல்லை. பூர்வீக சொத்து என்றால் ஆமாம். அழகர்சாமிக்கு ஏற்கனவே கூட்டுக்குடும்ப சொத்தை பாகம் பிரித்து கொண்டதால்தான் அவர் தனிப்பட்ட முறையில் சொத்தை தானம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் இல்லை.

6. தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு அழகர்சாமி 3ம் நபர்களுக்கு அவருக்கு பாகமான சொத்தை கிரையம் செய்து கொடுத்துளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலே கூட்டுக்குடும்ப சொத்தில் பாகம் செய்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஒரு சொத்தை பொறுத்து மட்டும்தான் சொல்லியுள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் ஒரு சொத்தை பொறுத்து என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. கூட்டுக்குடும்ப சொத்தை பாகம் செய்து 1ம் பிரதிவாதி அழகர்சாமி 2 பிரதிவாதி சதீஸ்குமாருக்கு சட்டப்படி கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதேபோல்தான் சட்டப்படி 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு சட்டப்படிகாக கிரையம் செய்துகொடுத்துளார் என்றால் சரிதான். ஆகையால் சட்டப்படி தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.